ஆரோவில்லின் நெருக்கடி நிலை மற்றும் அதிலிருந்து முன் செல்வதற்கான வழி

அன்புள்ள __,

“Auroville in Crisis & the Way Forward - ஆரோவில்லின் நெருக்கடி நிலை மற்றும் அதிலிருந்து சரியான ஆக்கப்பூர்வ முறையில் இனி செல்வதற்கான வழி” எனும் புதிய விரிவான அறிக்கையை இந்த கடிதத்துடன் இணைத்துள்ளோம். இந்த அறிக்கையில் ஆரோவில்லின் எதிர்காலத்தை பாதிக்கும் சரிசெய்ய முடியாத அளவிலான சேதங்கள் மற்றும் அதை நல்ல வழியில் முன்னடத்திக் கொண்டு செல்லும் வகையிலான சில நடைமுறையான தீர்வுகள் ஆகியவை அடங்கியுள்ளன.

இந்த அறிக்கை நான்கு முக்கிய விஷயங்களில் தற்போதைய ஆரோவில் நிர்வாகத்தின் தோல்வியை சுட்டிக்காட்டுகிறது: ஆரோவில் அறக்கட்டளை ஆணையில் உள்ள முக்கிய விதிமுறைகளை நிராகரித்தல், ஆரோவில் சாசனத்தை மீறுதல், ஆரோவில் சொத்துக்கள் மற்றும் சுற்றுச்சூழலை சேதப்படுத்துதல், மேலும் பயம், கவலை போன்ற இன்னல்களை உருவாக்கும் பல வகையான கடும் நடவடிக்கைகள் மூலம் ஆரோவில் குடியிருப்பாளர்களின் அடிப்படை உரிமைகளை ரத்து செய்தல்.

இந்த அறிக்கை இந்திய அரசாங்கத்தின் அனுதாபத்துடனான உடனடி தலையீட்டை வேண்டுகிறது. இந்தியா மற்றும் உலகளவில் முக்கியத்துவம் கொண்ட இச் சூழ்நிலையை அணுகுவதற்கு தேவையான முக்கிய தகவல்களை இந்த அறிக்கை உங்களுக்கு அளிக்கும் என்ற நம்பிக்கையில் இதை பகிர்கிறோம்.

இந்த அறிக்கையின் முதல் பகுதி ஆரோவில் அறக்கட்டளை ஆணையின் முக்கிய விதிமுறைகளையும், 2021 வரையிலான ஆரோவில் நிர்வாக வரலாற்றையும் எடுத்துக் காட்டுகிறது. இரண்டாம் பகுதி ஆளுகை, நிதி நிர்வாகம், வளர்ச்சி மற்றும் திட்டங்கள், செய்தி பரிமாற்றங்கள், பாதுகாப்பு மற்றும் சுற்றியுள்ள சமூகங்களின் மீதான தாக்கம் போன்ற ஆறு தலைப்புகளின் மீதான முக்கிய கருத்துகளை கூறுகிறது. மூன்றாம் பகுதி இந்த நெருக்கடி நிலையை கடந்து ஆக்கப்பூர்வமான முறையில் மேற்கொண்டு முன்னேறிச் செல்லும் வழிகளைப் பற்றி விவரிக்கிறது. மற்ற இணைப்புகள் கடந்த மூன்று வருடங்களாக ஆரோவில்லில் நடந்த விஷயங்கள் மற்றும் ஆரோவில்லின் வரலாறு சம்பந்தமான பல தொகுப்புகளையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளன.

முக்கியமாக முதல் பகுதியில் இருக்கும் ஆரோவில்லை சுற்றியுள்ள சமூகங்களின் மீதான தாக்கம் என்ற பகுதியை கூடுதல் கவனத்தோடு நோக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆரோவில்லைச் சுற்றியுள்ள பகுதிகளில் 40,000 பேர் வசிக்கும் 13 கிராமங்கள் உள்ளன. ஆரோவில் சுமார் 5000 மக்களுக்கு வேலை வாய்ப்புகள்,கிராமக் குழந்தைகளுக்கு கல்வி, திறன்சார் பயிற்சிகள் மற்றும் ஆரோக்கியம், சமூக நிறுவனங்கள், திறன் வளர்ச்சி, தலைமைத்துவம்

மற்றும் கலாச்சார பாதுகாப்பு ஆகிய பல துறைகளில் 50க்கும் மேற்பட்ட மண்டல வளர்ச்சி திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்தியுள்ளது.

தற்போதைய நிர்வாகம் கிராமங்களுடனான இதுபோன்ற பணிகளை நிறுத்துமாறு கூறி, திறமையுள்ள பல தமிழ் குடியிருப்பாளர்களைபணிநீக்கம் செய்து, வெளியிலிருந்து வேலையாட்களை நியமித்து, ஆரோவில் வயல்கள் மற்றும் காடுகளில் பணிபுரியும் தமிழர்களுக்கு ஊதியம் வழங்காமல், பல தமிழர்களை பொறுப்புகளிலிருந்து நீக்கி, ஆரோவில் நிலப்பரப்பிலிருக்கும் பல காட்டுப்பகுதிகள், உயிரினங்களின் இருப்பிடங்கள் மற்றும் நீர்நிலைகளை அழித்துள்ளது. இத்தகைய செயல்கள் பல குடும்பங்களை பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளது.

மேலும் ஆரோவில் நிலப்பரப்பில் இருக்கும் பெரும் கலாச்சார அடையாளங்களான தொல்பொருள் தளங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. தற்போதைய நிர்வாகத்தின் மேல்போக்கான வழிமுறைகள் மற்றும் திட்ட முயற்சிகளில் உள்ளூர்வாசிகளை கலந்தாலோசிக்க மறுக்கும் முறையும் இந்த சமூகத்தின் நீண்ட நிலைத்த தன்மையை பாதிக்கும் வகையில் இருக்கின்றன.

அறிக்கையின் இறுதிப் பகுதி தற்போதைய ஆரோவில் நிர்வாகத்தின் போக்கை சீர்திருத்தி சரியான போக்கில் மாற்றுவதற்கான நடைமுறை பரிந்துரைகளோடு இந்திய அரசாங்கத்தின் உதவியை நாடி வேண்டுகோள் விடுக்கின்றது. ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கான முதல்படியாக அச்சுறுத்தும் வகையிலான நடவடிக்கைகளை நிறுத்துதல் மற்றும் குடியிருப்பாளர்கள் பொறுப்புகளை மீண்டும் உறுதி செய்தல் ஆகியவற்றை செயல்படுத்த வேண்டும். ஆரோவில் அறக்கட்டளை ஆணையின் கீழுள்ள மூன்று அதிகார அங்கங்களினிடையில் சமநிலை, பரஸ்பர நல்லுறவு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த அறிக்கை 2024ல் நிறுவப்பட்ட ஆரோவில்லை ஆதரிக்கும் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான கூட்டமைப்பான ‘ஆரோவில் சர்வதேச தோழமை’யின் உறுப்பினர்களால் திரட்டப்பட்டது. இந்த கூட்டமைப்பு ஆரோவில்லின் நோக்கம், மதிப்புகள் மற்றும் பணிகளை உள்ளடக்கிய பல திட்டங்களை எடுத்துக்காட்டி ஆரோவில்லை ஆதரிக்கிறது. இந்த கூட்டமைப்புக்கு ஆரோவில் மற்றும் அதன் பிற மையங்களுடன் அதிகாரப்பூர்வமாக எந்த தொடர்பும் கிடையாது.

முழு அறிக்கையை நீங்கள் இந்த இணையம் மூலம் காணலாம். மேலும் மற்ற முக்கிய தொகுப்புகள் மற்றும் அறிக்கையின் இரண்டு பக்க சுருக்கத்தை இந்த இணைப்புகளில் காணலாம்.

மேலும் ஏதேனும் கேள்விகள் இருந்தால் தவறாமல் எங்களை அணுகுங்கள்.

உங்கள் கவனத்திற்கு நன்றி --
ஆரோவில் சர்வதேச தோழமையின் சார்பில்
டேவிட் விக்கெண்டன், ராஜர் டோல், மற்றும் டேவிட் ஹட்கின்சன்

மின்னஞ்சல் முகவரி: AurovilleGlobalFellowship@gmail.com

இணைப்பு: Auroville in Crisis: The Way Forward - ஆரோவில்லின் நெருக்கடி நிலை மற்றும் அதிலிருந்து முன் செல்வதற்கான வழி